**<u>சிதம்பரம் நகராட்சி</u>**

**2024ம் ஆண்டு புரட்டாசி திங்கள் 1ம் நாள் 17.09.2024ந்தேதி செவ்வாய்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம்**

**மன்றகூட்டப்பொருள்**

**1**) நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் ஜுலை மற்றும் ஆகஸ்ட் 2024 மாத நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :– மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.65, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**2)** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் தனியார் ஒப்பந்த நிறுவனமான திருமதி.K.முத்துலட்சுமி, பனங்காடு நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த 11.05.2023 முதல் 10.05.2024 வரை ஒராண்டு காலம் ஒப்பந்த காலம் முடிந்து மேலும், 3 மாத காலம் (01.06.2024 முதல் 31.08.2024 வரை) நீட்டிப்பு செய்து திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் கடந்த 10.09.2024ல் திருமதி. K.முத்துலெட்சுமி, பனங்காடு, நிறுவனம் தங்களால் தொடர்ந்து திடக்கழிவு மேலாண்மை ஒப்பந்த பணிகளை மேற்கொள்ள இயலாது என கடிதம் வழங்கியுள்ள நிலையில் சிதம்பரம் நகராட்சியில் தொடர்ந்து திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முகமை மூலம் பணிகள் மேற்கொண்டு வரும் திருமதி K.முத்துலட்சுமி, பனங்காடு நிறுவனமானது 01.09.2024 முதல் 30.11.2024 வரை 3 மாதங்கள் அல்லது 01.09.2024 முதல் புதிய ஒப்பந்ததாரரிடம் பணிகளை ஒப்படைக்கும் வரை திடக்கழிவு மேலாண்மை ஒப்பந்த பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளவும் பட்டியல் தொகை வழங்க நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. புதிய ஒப்பந்தபுள்ள கோருவதற்க்கு அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முன் மொழிவு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண். 882/2022/எச்1**

**அலுவலக குறிப்பு:** **1.** மன்றம் அனுமதிக்கலாம்.
**2,**நகராட்சி நிர்வாக இயக்குநர் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.66, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**3)** சிதம்பரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு நகராட்சி பகுதிகளில் இயங்கிவரும் 12 நகராட்சிப் பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை சுத்தம் செய்யும் பணியினை திருமதி. ஆர்.கோமதி, சிதம்பரம் ஒப்பந்ததாரர் மூலம் 20 தூய்மைப்பணியாளர்களை கொண்டு தூய்மையாக பராமரிக்கும் பணி தினம் தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மேற்கண்ட ஒப்பந்த பணியின் ஒப்பந்த காலம் 31.08.2024 வுடன் முடிவடைந்துவிட்டதால் அதே ஒப்பந்ததாரரால் அதே விலை விகிதத்தில் பள்ளி மாணவர்களின் நலன் கருதி மேலும் 01.09.2024 முதல் 30.11.2024 வரை மூன்று மாதங்களுக்கு காலநீட்டிப்பு செய்திடவும் மேலும், 12 நகராட்சி பள்ளிகளிலும் உள்ள கழிவறைகளையும் தூய்மை பணிகள் தினந்தோறும் மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி

கோரவும் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருடத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.12,00,000/- (பன்னிரெண்டு இலட்சம்) பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி மற்றும் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றதலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4424/2017/எச்1)**

**தீர்மானம் எண்.67, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**4)** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் வடகிழக்கு பருவமழை 2024 துவங்கிய நிலையில் நகராட்சியால் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்செரிக்கை நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு

1. மழைநீர் தேங்கும் இடங்களில் மழை நீரினை அகற்றிய பிறகு கிருமி நாசினி பவுடர் தெளிக்கவும், மற்றும்
2. குப்பைகள் தேக்கம் அடையாமல் தினம்தோறும் அப்புறப்படுத்தபட்டு , குப்பைகள் அகற்றிய இடங்களில் கிருமி நாசினி பவுடர் தெளிக்கவும், மேலும்
3. சாக்கடை கழிவுநீர் தேங்கும் பகுதிகளில் சாக்கடை கழிவுகள் அகற்றிய பின் கிருமி நாசினி பவுடர் தெளிக்கவும் மற்றும்
4. கொசு புழு பணியாளர்களுக்கு, கொசுபுழு ஒழிப்பு பணிகளுக்கு பிளீச்சிங் பவுடர் தேவைப்படுவதாலும் பொது சுகாதார அத்தியாவசிய தேவைகளுக்கும், அனைத்து மத கோவில் திருவிழாக்கள் பண்டிகைகளுக்கும் மற்றும் இதர
5. அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்படுவதால் கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு கிருமி நாசினி பொருட்கள்கள் வாங்கி வழங்கிடவும்

| | |
|---|---|
| 1. பிளீச்சிங்பவுடர் | –10,000 கிலோ (10 டன்) |
| 2. நீர்த்த சுண்ணாம்பு | – 40,000 கிலோ (40 டன்) |
| 3. கருப்பு பினாயில் | – 500 லிட்டர் |
| 4. லெமன் கிராஸ் | – 100 லிட்டர் |

மேற்கண்ட கிருமி நாசினி பொருட்கள் வடகிழக்கு பருவமழை 2024 முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் அன்றாட பொது சுகாதார பணிகளுக்கும் கிருமி நாசினி பொருட்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.9,50,000/- (ரூபாய் ஒன்பது லட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி மற்றும் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** **ந.க.எண். 1708/2024/எச்1**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.68, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**5)** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் பணியான கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு 50 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC) கங்கைமகளிர் சுய உதவிக்குழு, சிதம்பரம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமித்து பணிகள் பார்க்கப்பட்டு வருகிறது. மேற்படி கங்கை மகளிர் சுயஉதவிகுழு ஒப்பந்தகாலம் 31.08.2024- ல் முடிவடைந்து விட்டதால், பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொண்டு வரும் மேற்கண்ட கங்கை மகளிர் சுய உதவிக்குழு, சிதம்பரம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள மேலும் மூன்று மாதங்களுக்கு 01.09.2024 முதல் 30.11..2024 வரை பணி நீட்டிப்பு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் பார்வை மற்றும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**1. மன்றம் அனுமதிக்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்: 2481 /2019/எச்1)

**தீர்மானம் எண்.69, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

6) சிதம்பரம் நகராட்சியில் பணியாற்றிவரும் கீழ்கண்ட பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு சீருடைகள் வழங்கப்பட்டு வருகிறது, 2024–ம் ஆண்டில் வர இருக்கும் தீபாவளி பண்டிகைக்கு கீழ்காணும் பணியாளர்களுக்கு சீருடைகள் வழங்கவேண்டியது இன்றியமையாததாகும். பணியாளர்கள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | தூய்மை பணியாளர்கள் | – 32 நபர்கள் |
| 2. | தூய்மை பணி மேற்பார்வையாளர்கள் | – 5 நபர்கள் |
| 3. | ஓட்டுநர்கள் | – 2 நபர்கள் |
| 4. | குடிநீர் மற்றும் வடிகால் பிரிவு பணியாளர்கள் | – 6 நபர்கள் |
| 5. | அலுவலக பணியாளர்கள் மற்றும் இரவு காவலர்கள் | – 4 நபர்கள் |
| 6. | மகப்பேறு உதவியாளர் | – 1 நபர் |
| | **மொத்தம்** | **– 50 நபர்கள்** |

மேலே குறிப்பிட்டுள்ள 50 பணியாளர்களுக்கும் (ஆண்கள் மற்றும் பெண்கள் உள்பட) இரண்டு செட் சீருடைகள் அரசு சார்பு நிறுவனமான கோ.ஆப்டெக்ஸ், கடலூர் மூலம் வாங்குவதற்கும் தையற்கூலி வழங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/ (இரண்டு லட்சம் மட்டும்) வாங்கி வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி மற்றும் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** (1) மன்றம் அனுமதிக்கலாம்.

(2) மேற்கண்ட சீருடைகள் வாங்குவதற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 2809/2021/எச்1)**

**தீர்மானம் எண்.70, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**(ஒம்).கே.ஆர்.செந்தில்குமார்**
**நகர்மன்ற தலைவர்**
**சிதம்பரம் நகராட்சி**

**சிதம்பரம்**
**11.09.2024**

**//உண்மை நகல் உத்தரவுபடி//**

**ஆணையாளர்**
**சிதம்பரம் நகராட்சி.**